# குறைவையெல்லாம் நிறைவாக்குவார். பிலிப் 4 : 19

**தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக**
**அவருக்கு ஸ்தோத்திரம்**

காலங்களோ கடந்து செல்கின்றது. ஆனால் என் எண்ணங்களோ நிறைவடையவில்லையே என அங்கலாய்க்கும் சகோதரனே, சகோதரியே,

**குறைவையெல்லாம் .......... நிறைவாக்குகிற தேவன்**
**உங்களுக்கு உண்டென்பதை மறந்து போகவேண்டாம்.**
**தீத்து 1 : 5 கூறுகிறது**

நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குப்படுத்து

**யாக் 1 : 4 கூறுகிறது :** நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

**யாக்கோபு 3 : 17 கூறுகிறது**

பரத்திலிருந்து வருகிற ஞானமோ இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாகவும், பட்சபாதமில்லாததாயும் . . . இருக்கிறது.

**லூக் 12 : 33–ல் இயேசு கூறினார் :** குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்கு சம்பாதித்து வையுங்கள்.

**சங் 34 : 10 கூறுகிறது :** சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.

**இயேசு நிறைவானவர், ஆதலால் கட்டாயமாக**
**உங்கள் குறைவையெல்லாம் .......நிறைவாக்குவார்.**
**வேதம் சொல்லும் வசனங்களை தொடர்ந்து வாசிப்போம்**

**எபேசியர் 1 : 23 கூறுகிறது :** எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய, சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.

**1 கொரிந்தியர் 13 : 10 கூறுகிறது**

நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.

உங்கள் குறைவையெல்லாம் ஒரு முறை கர்த்தரிடத்தில் கூறுங்கள்.
என் அன்பு சகோதரனே, சகோதரியே,
உங்கள் குறைவு ஆவிக்குரிய வாழ்க்கையிலா ? அல்லது உலக தேவைகளிலா ? ஒரு முறை சிந்தித்து பாருங்கள்.

**நிறைவை பெற்ற பரிசுத்தவான்களை, கீழே காண்போம்.**

**அப்போ 4 : 8** **பேதுரு** பரிசுத்த ஆவியினாலே நிறைந்து...
**அப்போ 6 : 5** விசுவாசமும் பரிசுத்தஆவியும் நிறைந்தவனாகிய **ஸ்தேவான்......**
**அப்போ 11 : 24** **பர்னபா** நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்
**அப்போ 13 : 9** **பவுல்** என்று சொல்லப்பட்ட சவுல், பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய்,

இந்த தேவன், இந்த மாதத்தில் உங்களை விசுவாசத்திலும், பரிசுத்த ஆவியிலும் நிரப்பி, குறைவை நிறைவாக்குவாராக.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

**பவுல் கூறுகின்றார் – 1 தெசலோனிக்கேயர் 3 : 10**

உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும் பொருட்டு இரவும், பகலும் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

**கொலோசெயர் 1 : 24 கூறுகிறது**

கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.

## குறைவுகள் நிறைவு பெற இரு வழிகள்

**முதலாவது : யாக்கோபு 1:5** உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ள வனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய **தேவனிடத்தில் கேட்கக் கடவன்.** அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

**இரண்டாவதாக : தீத்து 3 : 14** குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக **நற்கிரியைகளைச் செய்ய பழகட்டும்.**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

குறைவுகள் நீங்குவதற்காக முதலாவது தேவனிடத்தில் கேளுங்கள். இரண்டாவதாக நற்கிரியைகளை செய்ய பழகுங்கள்.

ஏனெனில் நன்மையான எந்த ஈவும் பரத்திலிருந்து வருகின்றது. மிக முக்கியமாக, குறைவு நிறைவாகுவதற்கு, சிறந்த வழி **துதித்தல்** ஆகும்

**சங்கீதம் 71 : 8 கூறுகிறது**

என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக. அல்லேலுயா.

## குறைவை நிறைவாக்க இரு வழிகள்

முதலாவது உங்களிடம் உள்ள ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் **இயேசுவிடம்** கொண்டு வாருங்கள். கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி கெஞ்சி ஜெபியுங்கள்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, ஊழியரே,

எதுவாக இருக்கட்டுமே உங்களிடம் உள்ளவற்றை, முதலாவது தேவனிடத்தில் கொண்டு வாருங்கள். ஏனெனில்,

**மத்தேயு 14 : 20 கூறுகிறது**

எல்லோரும் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகளை 12 கூடை நிறைய எடுத்தார்கள்.

கர்த்தருடைய ஆசீர்வாதம் என்பது, இரண்டு வார்த்தையில் அடங்கியிருக்கிறது.

1. திருப்தி 2. மீதி

உங்கள் குறைவை கர்த்தர் நிறைவாக்குவார்.

நீங்கள் திருப்தியடைந்து மீதியையும் காண்பீர்கள்.

இரண்டாவது உங்கள் காரியத்தை ஆராய்ந்து புதிய மாற்றம் செய்யுங்கள். இடது புறமாக போடும் வலையை, வலதுபுறமாக போடுங்கள்

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் பேசுகிறபடி, உங்கள் காரியத்தில் சிறு மாற்றம் தேவை. ஏனெனில் **கர்த்தர்** கூறுகின்றார்.

**உன் வழிகள் என் வழிகள் அல்ல.**

ஆதலால் கர்த்தருடைய வார்த்தையின்படி உங்கள் காரியத்தில், சிறு மாற்றம், ஆனால் நேர் எதிர் மாற்றம் செய்யும்போது,

**மத்தேயு 13 : 48 வசனத்தின்படி**

வலை நிறைந்தபோது அதை கரையிலே இழுத்தார்கள்.

நீங்களும் நிறைவான ஆசீர்வாதம் பெறுவீர்கள்.

இந்த மாதம் கீழ்கண்டவாறு அடிக்கடி உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி,**
**என் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள்**
**மகிமையிலே நிறைவாக்குவார் – ஆமென்.**

**நப்தலி**யின் ஆசீர்வாதம் உங்களை நிரப்புவதாக

**உபாகமம் 33 : 23**

**நப்தலி**,கர்த்தருடைய தயவினாலே திருப்தியடைந்து, அவருடைய ஆசீர்வாதத்தினாலே நிறைந்திருப்பான். ஆமென்.